**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**CC.No.164/2025**

PW-2

| Name | பேச்சிமுத்து(PW2) | Calling | உதவி ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's Name | | | |
| Village | பெருமாநல்லூர் காவல் நிலையம் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th **day of March 2026** by K.Kulanthiavel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused 1 and 2 present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது பெருமாநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.09.2024 ஆம் தேதி முதல்நிலை காவலர் பாலச்சந்தர் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தமிழ்ச்செல்வன் என்பவரது புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.408/2024 சட்டப்பிரிவு 296(பி),118(1), 329(4), 351 (3) of BNS ன்-கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்களின் புலன் விசாரணைக்காக வைத்தார். **புகார் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

உதவி ஆய்வாளர் சண்முகம் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 13.09.2024 ம் தேதி மாலை 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணி, ஜெயப்பிரபா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி

வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடத்தில் இருந்து இரும்பு கம்பி மற்றும் கைக்கு அடக்கமானகல் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார்.பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7,9 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அந்த படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரும்பு கம்பி மற்றும் கல் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**கடந்த 16.09.2024 ம் தேதி வழக்கில் காயம்பட்ட தமிழ்ச்செல்வன் என்பவருக்கு சிகிச்சை அளித்த திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் சிவசெல்வசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த காயச் சான்று (அ.சா.ஆ.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் முன்ஜாமீன் பெற்று விட்டதால் வழக்கின் புலன் விசாரணை முடித்து 27.12.2024 ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 296(பி),118(1), 329(4), 351 (3) of BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி இல்லை என்றும், ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றப்பட்டது என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை.**

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N. கீர்த்தனா<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| | |
|---|---|
| | |